# இராமநாதபுரம் நகராட்சி

**இராமநாதபுரம் நகராட்சியில் 2021 அக்டோபர் மாதத்திற்கான நகர் மன்ற அவசர கூட்டம் 12.10.2021–ந் தேதி காலை 11.35 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ), இராமநாதபுரம் நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்:-**

<table>
<tr>
<td>பொருள் எண்..1</td>
<td>
இராமநாதபுரம் நகராட்சி, தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பில், கலைஞர் நகர் புற மேம்பாட்டுத் திட்டம் 2021–22 ன்கீழ் நகராட்சி பகுதியில் உள்ள மண் சாலைகளை தார் சாலை மற்றும் இதர சாலைகளாக மாற்றம் செய்ய அறிவிப்பு வெளியிட்டதன் கீழ், உரிய திட்டப் பிரேரணைதயார் செய்து சமர்ப்பிக்க நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் உத்திரவிடப்பட்டது. அதன்படி இந்நகராட்சியில் கீழ்க்கண்ட மண் சாலைகளை தார் சாலை மற்றும் பேவர் பிளாக் சாலைகளாக மாற்றம் செய்வதற்கு தயார் செய்தமதிப்பீடு ரூ.25.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பணிகளின் பெயர்கள்</th><th>மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>கருவேப்பிலைக்கார மாரியம்மன் கோவில் தெரு– (135011R129), கொடலைக்கார ஊரணி பனை மரத்து காளியம்மன் கோவில் சாலை – (135012S032) மற்றும் அண்ணாநகர் குட்செட் காலணி – (135023L053) ஆகிய பகுதிகளில் பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணி.</td><td>ரூ.25.90</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>ரூ.25.90</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு:– 1.</u>மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2.மண் சாலையினை பேவர் பிளாக் சாலைகளாக மாற்றம் செய்வதற்கான மதிப்பீடு ரூ.25.90 இலட்சத்தினைஅரசு முழு மானியமாக பெற கருத்துரு சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்.2634/2021/இ1.
</td>
<td>தீர்மானம் எண்.1566<br>அலுவலகக் குறிப்பு ஏற்பு.</td>
</tr>
</table>

**தனி அலுவலர் மற்றும்**
**நகராட்சி ஆணையர்(பொ)**
**இராமநாதபுரம் நகராட்சி**

**<u>இராமநாதபுரம் நகராட்சி</u>**

**இராமநாதபுரம் நகராட்சியில் 2021 அக்டோபர் மாதத்திற்கான நகர் மன்ற அவசர கூட்டம் 12.10.2021–ந் தேதி காலை 11.10 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ), இராமநாதபுரம் நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்:-**

| | | |
|---|---|---|
| பொருள் எண்..1 | இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர்(பொ) அக்டோபர்–2021–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**– மன்றம் பதிவு செய்யலாம். | **தீர்மானம் எண்.1567**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்பு.** |
| பொருள் எண்..2 | இராமநாதபுரம் நகராட்சி பொறியாளர் அக்டோபர்–2021–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**– மன்றம் பதிவு செய்யலாம். | **தீர்மானம் எண்.1568**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்பு.** |
| பொருள் எண்..3 | இராமநாதபுரம் நகராட்சி, புதிய பேருந்து நிலையத்தில் உள்ள நம்மடாய்லெட், ரோமன் சர்ச் அருகில் உள்ள நம்ம டாய்லெட் மற்றும் வண்டிக்காரத் தெருவில் உள்ள நம்ம டாய்லெட் கழிப்பறையினை பயன்படுத்த நபர் ஒருவருக்கு ரூ.2.00 அளவில் வீதம் கட்டணம் வசூல் செய்து பராமரிக்க M/s.Socio Economic Reform Organization, இராமநாதபுரம் அறக்கட்டளைக்கு இந்கர் மன்ற தீர்மானம் எண்–2014,நாள்.21.02.2016–ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வலுவலக செயல்முறை ஆணையில் ந.க.எண்.1429/2016/இ1, நாள்.03.03.2016–ன்படி நம்ம டாய்லெட் கழிப்பறை பராமரிப்பு கட்டணத்தை வசூல் செய்து நிபந்தனைகளுக்குட்பட்டு பராமரிப்பு மேற்கொள்ள 01.04.2016 முதல் 31.03.2017 வரை M/s.Socio Economic | **தீர்மானம் எண்.1569**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்பு.** |

| | | | |
|---|---|---|---|
| | Reform Organization–க்கு உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் ந.க.எண்.1429/2016/இ1, நாள்.09.04.2018 இவ்வலுவலக கடிதம் வாயிலாக தங்களுக்கு வழங்கப்பட்ட செயல்முறையினை ரத்து செய்து அறிவிப்பு வழங்கப்பட்டது. M/s.Socio Economic Reform Organization,Ramanathapuram அவர்களது 09.04.2018–ம் மனுவில் மீண்டும் பரிசீலனை செய்ய கோரிய கடிதத்தில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை நீதிப்பேராணைஎண்.WP(MD) No.11494/2018, நாள்: 30.05.2018–ல் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பில்மனுதாரரின் விண்ணபத்தினை 2 வாரத்திற்குள் பரிசீலனை செய்ய தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில் இன்று வரை ‘‘M/s.Socio Economic Reform Organization நிறுவனம் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.<br><br>மேலும் இராமநாதபுரம் மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் அவர்களதுபுகார் மனுவில் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள நம்ம டாய்லெட்டிற்கு கட்டணம் வசூலிக்கக் கூடாது என்றும், அதனை கட்டணமில்லா கழிப்பறையாக மாற்றவேண்டும் என்றும், மேலும் சுகாதார மற்ற முறையில் பராமரிப்பு செய்யப்படுவதாக ஆய்வில் கண்டறியப்பட்டதாக தெரிவித்துள்ளார்.<br><br>தற்பொழுது M/s.ARAM FOUNDATION, No.58/11, Maduraiyar Street, Near by DD Vinayagar School, Kenikarai, Ramanathapuram அவர்களது நிறுவனம் இயங்குவதற்கு போதிய நிதி ஆதாரம் இல்லாததாலும் சமூகப்பணியினை செய்ய இயலாத நிலையில் உள்ளதாலும் அண்ணல் காந்தியடிகள் சாலை (வண்டிக்காரத் தெருவில்) உள்ள நம்மடாய்லெட் குறைந்த அளவிலான பராமரிப்பு கட்டணம் வசூலித்து நல்ல முறையில் பராமரிப்பதாக விண்ணப்பம் அளித்துள்ளார்.<br><br>இதனை கருத்தில் கொண்டு நன்கு ஆராயப்பட்டதில் M/s.Socio Economic Reform Organization, Ramanathapuram பல ஆண்டு காலமாக பராமரிப்பு செய்து வருவதுடன் பொதுமக்கள் மற்றும் மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் அவர்களால் புகார் தெரிவிக்கப்பட்டதாலும், மற்ற விண்ணப்பம் செய்யப்பட்ட M/s.ARAM FOUNDATION, Ramanathapuram என்ற தொண்டு நிறுவனம் நலிவடைந்த நிலையில் உள்ளதால், அதனை கருணையுடன் பரிசீலிக்கப்பட்ட வகையிலும், M/s.Socio Economic Reform Organization, எண்.2, காந்தியடிகள் சாலை, இராமநாதபுரம் நிறுவனத்திற்கு அண்ணல் காந்தியடிகள் சாலை (வண்டிக்காரத் தெருவில்) உள்ள நம்ம டாய்லெட் கழிப்பறையினை பராமரிப்பு பணிக்கு | |

<table>
<tr>
<td></td>
<td>வழங்கப்பட்ட உத்திரவினை ரத்து செய்தும், M/s.ARAM FOUNDATION, No.58/11, Maduraiyar Street, Near by DD Vinayagar School, Kenikarai, Ramanathapuram அவர்களது நிறுவனத்திற்கு அண்ணல் காந்தியடிகள் சாலை (வண்டிக்காரத் தெருவில்) உள்ள நம்ம டாய்லெட் கழிப்பறையினை பராமரிப்பு கட்டணமாக குறைந்த அளவில் ரூ.1.50 வீதம் (நபர் ஒன்றிற்கு) வசூல் செய்துகொண்டு நல்ல முறையில் எந்தவித புகாருக்கு இடமளிக்காமல் கழிப்பறைகளை பராமரிப்பு பணி மேற்கொள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பராமரிப்பு மேற்கொள்ளமன்றத்தின் முடிவுக்கும், அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.<br>
<u>நிபந்தனைகள்:–</u><br>
1.இவ்வுத்திரவு முற்றிலும் தற்காலிகமானது.<br>
2.இவ்வுத்திரவு வழங்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டிற்கு மட்டுமே செல்லுபடியாகும்.<br>
3.நகராட்சி தெரிவிக்கும் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு ரூ.100/– மதிப்புள்ள ஒப்பந்தப்பத்திரத்தில் எழுதி சமர்ப்பிக்கப்படவேண்டும்.<br>
4.நகராட்சிக்கு தேவைப்படும் பட்சத்தில் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகராட்சியே கையகப்படுத்திக் கொள்ளும் என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.<br>
5.பொதுமக்களிடமிருந்து புகார் வரப்பெற்றால் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.<br>
<u>அலுவலக குறிப்பு</u>–மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்.1429/2016/இ1.</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..4</td>
<td>இராமநாதபுரம் நகராட்சிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது ந.க.எண்.19089/2021/இ2, நாள்.27.10.2021-ன்படி கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி மூலதன மானிய நிதி CGF 2021-22 திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு திட்ட அறிக்கை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நகர் பகுதியில் சமீபத்தில் பெய்து வந்த வடகிழக்கு பருவமழையையொட்டி, நகர் பகுதியில் சேதமடைந்த சாலைகளை செப்பணிடும் பொருட்டு கீழ்க்கண்ட மழை நீர் வடிகால் அமைத்தல் பணி, தார்சாலை மற்றும் பேவர் பிளாக் சாலை பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர் / குறியீட்டு எண்</th><th>சாலையின் நீளம் (மீ)</th><th>மதிப்பீடு தொகை ரூ. (இலட்சத்தில்)</th></tr>
<tr><td></td><td>Providing BT Surface by using Paver Machine at Allikanmai East</td><td></td><td></td></tr>
</table></td>
<td>தீர்மானம் எண்.1570<br>அலுவலகக் குறிப்பு ஏற்பு.</td>
</tr>
</table>

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1. | Street - 135008R094, Fathima Nagar North 1st Cross Street - 135006R055, Fathima Nagar North 2nd Cross Street - 135006R048,Fathima Nagar North 3rd Cross Street - 135006R047, Kottaimedu South 2nd Cross Street - 135001R001, Fathima Nagar South 2nd Cross Street - 135006R054,Fathima Nagar South 1st Cross Street - 135006R053,Naagar Kovil street - 135031S085, Vasantha Nagar 1st Street - 135012R142, Kothanar Middle street - 135031S082 | 1475.00 | 100.00 | | |
| | 2 | Providing Interlocking Paver Block Surface Road at kollikudu East 2nd cross street - 135001L002, Thonnaigurusamy 1st cross street-135002R017, Thonnaigurusamy 2nd cross street-1350012R016, 3rd cross street-135002R015 , Muthu thevan lane-135002S002, Dhiraviam lane-135002R018, Kasirajan lane-135004R033, Vannar street -135005R045,Saveriyar Kovil East West Street - 135007R058,Thayumanasamy North cross street - 135010L009,Karuppanchetti Oorani Road - 135013R152,Thangappa Nagar 1st cross street-135008S009, Thangappa Nagar 2nd cross street -135008R064,Thangappa Nagar 3rd cross street 135008R065,Tholkadai Lane-135008L008,Board School Lane-135008S010,Chettiyar Middle 1st Cross Lane-135013L016, Chettiyar Middle 2nd Cross Lane-135013S035, Chettiyar Middle 3rd Cross Lane-135013L015,Morkadai Lane-135013S036,Pallivasal North Cross Lane -135014S039, Muthalamman kovil street - | 6028.00 | 440.00 | | |

<table>
<tr><td></td><td>
<table>
<tr><td></td><td>135013R151,Sivan Kovil south Lane -135013S037,Sivan Kovil North Lane -135013S038,Kollampattarai street -135015S041,Kaliga devi amman kovil street -135016R169, Meenakara street -135019S048, Patchi Valaiyarkara street-135020R186,Kamatchi Amman Kovil Cross street-135020R195</td><td></td><td></td></tr>
<tr><td>3</td><td>Construction of Storm Water Drain with cover slab at Agraharam Road, Agil Kidangu Street, Durairaj sathira street and sivaganapuram road</td><td>1710.00</td><td>190.00</td></tr>
</table>
<br>
<u>அலுவலககுறிப்பு</u>:-1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2) மேற்படி இத்திட்ட பணிக்கு விரிவான திட்டப்பிரேரனை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்.2709/2021/இ1.
</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்..5</td><td>
இராமநாதபுரம் நகராட்சிக்கு பாத்தியமான புதிய பேருந்து நிலையம் கட்டண கழிப்பறை வசூல் உரிமம் மற்றும் பழைய(ம) புதிய பேருந்து நிலையத்தில் பேருந்துகளின் நுழைவு கட்டணம் வசூல் ஆகிய இரண்டு இனங்களுக்கும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 10 தடவைக்கு மேல் கோரப்பட்டும் வைப்புத் தொகை மற்றும் கூடுதல் காப்பு தொகை அதிகமாக உள்ள காரணத்தாலும் மற்றும் கொரோனா அதிகமாக உள்ள காரணத்தாலும் மற்றும் கொரோனா தொற்று நோய் முழு ஊரடங்க காரணத்தாலும் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி எடுக்க யாரும் முன் வரவில்லை. எனவே மேற்படி ஏலம்/குத்தகை இனங்களுக்கு வைப்புத் தொகை கூடுதல் காப்புத் தொகையினை குறைக்க மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.
<br>
<table>
<tr><th>வ.</th><th></th><th>தற்போதைய</th><th>குறைக்கவேண்டிய</th></tr>
</table>
</td><td>தீர்மானம் எண்.1571<br>அலுவலகக் குறிப்பு ஏற்பு.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>எண்</th><th>குத்தகைவிபரம்</th><th>காப்பு தொகை</th><th>கூடுதல் காப்பு தொகை</th><th>காப்பு தொகை</th><th>கூடுதல் காப்பு தொகை</th></tr>
<tr><td>1.</td><td>நகராட்சி புதிய பேருந்து மற்றும் பழைய பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளின் நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்</td><td>7,00,000</td><td>5,00,000</td><td>3,00,000</td><td>3,00,000</td></tr>
<tr><td>2.</td><td>புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பறை மற்றும் குளியலறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்</td><td>5,00,000</td><td>10,00,000</td><td>3,00,000</td><td>2,00,000</td></tr>
</table>
<br>
<u>அலுவலக குறிப்பு:</u> 1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2)புதிய மற்றும் பழைய பேருந்து நிலையங்களில் பேருந்துகளின் நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பறை (ம) குழியலறை கட்டணம் வசூல் உரிமத்திற்கான வைப்புத் தொகை மற்றும் கூடுதல் காப்பு தொகையினை நிர்வாக நலன் கருதி குறைக்க மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..6</td>
<td>இராமநாதபுரம் நகராட்சி அலுவலக ஈப்பு TN65 AF-4353 வாகனத்திற்கு பழுதுநீக்கம் பணி மேற்கொள்வதற்கு உத்தேச செலவினம் ரூ.23,000/-த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u>- 1)மன்றம்அனுமதிக்கலாம்.<br>
2)இப்பணி அவசர அவசிய வாகன பணி என்பதினால் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி</td>
<td>தீர்மானம் எண்.1572<br>அலுவலகக் குறிப்பு ஏற்பு.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் மூலம் பணி மேறகொள்ளவும், அதற்கான பணி உத்திரவு வழங்குவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>ந.க.எண்.2633/2021/இ1 | |
| பொருள் எண்..7 | இராமநாதபுரம் நகராட்சி, பொது பிரிவு, கணிணி பிரிவு, பொது சுகாதார பிரிவு, பொறியியல் பிரிவு ஆகிய பிரிவுகளில் உள்ள கணிணிகள் பழுதாகியுள்ளதால் புதியதாக லேப்டாப், கணிணிகள், மற்றும் Cash Counting Machine ஆகியவை வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.10.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>** -1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)இப்பணி அவசர அவசிய பணி என்பதினால் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களது முன் ஒப்புதல் பெற்று விலைப்புள்ளி அறிவிப்பு கோருவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>3)இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.2495/2021/இ1 | **தீர்மானம் எண்.1573**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்பு.** |
| பொருள் எண்..8 | இராமநாதபுரம் நகராட்சி அலுவலகத்தில் கணிணி பிரிவில் உள்ள *Richo Gesterner (MP 2001-L)* ஜெராக்ஸ் மிஷின் பழுதாகியுள்ளதால் அதனை பழுதுநீக்கம் பணிமேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத்திறகு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**-1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) இப்பணி அவசர அவசிய வாகன பணி என்பதினால் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி உள்ளூர் விலைப்புள்ளி கோரி குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ள அரசு அங்கீகாரம் பெற்ற விற்பனையாளரால் "M/s.Karunambigai Info Systems and Services சிவகங்கை அவர்கள் மூலமாக பழுதுநீக்கம் செய்வதற்கு பணி உத்திரவு வழங்குவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>ந.க.எண்.2708/2021/இ1 | **தீர்மானம் எண்.1574**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்பு.** |

| | | |
|---|---|---|
| பொருள் எண்..9 | இராமநாதபுரம் நகராட்சி வார்டு எண்-14, சர்வே எண்-155 அம்பலகார தெருவில் உள்ள பழைய தார்சு கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்துவது வழக்கு எண்.WP(MD)No.15970/2021 தீர்ப்பு வரப்பட்டது. வழக்கில் ஆஜராகி வழக்கை நடத்திட வழக்கறிஞர் திரு.ஏ.கண்ணன் அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ.15,000/- வழங்கலாம் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2620/2021/எப்1 | **தீர்மானம் எண்.1575**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்பு.** |
| பொருள் எண்..10 | இராமநாதபுரம் நகராட்சி, வார்டு எண்-19 பட்சிவளையக்காரத் தெரு, வரிவிதிப்பு எண்.135/019/00175-ல் உள்ள சொத்துவரிக்கு திருமதி.ஆர்.சகிலாபானு என்பவர் வாரிசு அடிப்படையில் தனது பெயரை சேர்க்க சொல்லி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்பு முறை மன்றத்தில் சென்னையில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கு விண்ணபப்ம் எண்.77M/2021 நாள் .07.09.2021 தொடரப்பட்ட வழக்கிற்கு இந்நகராட்சி நகர்மன்ற வழக்கறிஞர் திரு.என்.சரவணபாபு என்பவருக்கு உரிய சட்டகருத்துரை வழங்குவதற்கான கட்டணம் ரூ.5000/- வழங்க மன்றபொருள் வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**-மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2110/2021/எப்1 | **தீர்மானம் எண்.1576**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்பு.** |
| பொருள் எண்..11 | இராமநாதபுரம் நகராட்சி வார்டு எண்-7 வெற்றிலைக்காரத் தெருவில் சாலை அமைத்தல் பணி துவங்கிய நிலையில் மைனர் சுலைமான் மேற்படியாரின் தாயாரும் அடுத்த சினேகிதியுமான சகுபர் ஷகிலாபானு என்பவர் இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஆட்சேபனை தெரிவித்து வழக்கு எண்.I.A.R.778/2021 மு.வ.எண்.95/2021-ன்படி வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கினை எடுத்து நடத்தி முடித்தமைக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.5000/-ஐ திரு.என்.சரவணபாபு அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**-மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண்.1577**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்பு.** |

<table>
<tr><td></td><td>ந.க.எண்.2286/2021/இ1</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்..12</td><td>இராமநாதபுரம் நகராட்சி, வருவாய் நிதி 2021-22, அலுவலக பயன்பாட்டிற்கு புதியதாக லேப்டாப்கள், கணிணிகள் மற்றும் Cash Countin Machine ஆகியவை வாங்குவதற்கு 29.10.2021-ம் தேதி விலைப்புள்ளி கோரபட்டதில் கீழ்க்கண்டவறாக மூன்று விலைப்புள்ளிதாரர்கள் வரப் பெற்றன.
<table>
<tr><th>வரிசை எண்</th><th>வரப் பெற்ற விலைப்புள்ளி தாரர்களின் பெயர்கள்</th><th>வரப்பெற்றுள்ள விலைவிகிதம் கூடுதல் / குறைவு ( ரூ )<br>1- லேப்டாப், 1- கணிணிகள்<br>1- Cash Countin Machine</th></tr>
<tr><td>1.</td><td>M/S.Sivajothi Computer Centre, No- 171, Vandikara Street, Ramanathapuram.</td><td>1, 88, 900 /-</td></tr>
<tr><td>2.</td><td>M/S.Computer Instruments No–60, Pandikammai Samy Aranmanai West Street, Ramanathapuram.</td><td>1,93, 000 /-</td></tr>
<tr><td>3.</td><td>M/S. Sneha Systems, No– 9A, P.K. Samy Street, Ramanathapuram.</td><td>1,96,500 /-</td></tr>
</table>
மேற்கண்ட வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிதாரர்களில் குறைந்த விலைவிகிதம் விலைப்புள்ளி விலைப்புள்ளிதாரான M/S.Sivajothi Computer Centre, No-17, Vandikara Street, Ramanathapuram அவர்களது குறைந்த விலைப்புள்ளியை ஏற்று மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u>-மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்.2495/2021/இ1</td><td>தீர்மானம் எண்.1578<br>அலுவலகக் குறிப்பு ஏற்பு.</td></tr>
<tr><td>பொருள் எண்..13</td><td>இராமநாதபுரம் நகராட்சி, அவசர அவசியம் கருதி, சென்னை மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920, நகராட்சிகளின் சட்டவிதி 15ன் கீழ் 01.10.2021 முதல் 31.10.2021 வரையிலான கீழ்க்கன்டவாறாக உள்ள மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் மன்றத்தில் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.</td><td>தீர்மானம் எண்.1579<br>அலுவலகக் குறிப்பு ஏற்பு.</td></tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 1) | இராமநாதபுரம் நகராட்சி, Covid-19, நகர் பகுதியில் கொரோனா வைரஸ் தொற்று பரவுதல், இராமநாதபுரம் ராஜா மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் தற்காலிக கடைகள் (மார்க்கெட்) 69 எண்ணம் சாமியானா பந்தல் மூலம் 76 நாட்களுக்கு அமைத்து கொடுக்கும் பணி முடிவுற்றமைக்கு பட்டியல் தொகை வழங்கியே முறையே. | ரூ.9,43, 920/- | | |
| | 2) | இராமநாதபுரம் நகராட்சி வார்டு எண் 25, லேத்தம்ஸ் பங்களா ரோட்டில் அமைந்துள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் உள்ள குளோரினேசன் டேங்க் பழுதடைந்துள்ளதால் அதனை மாற்றி புதிதாக 1000 லிட்டர் கொள்ளவு கொண்ட புதிய டேங்க் வாங்கி கொடுக்கும் பணி முடிவுற்றமைக்கு பட்டியல் தொகை வழங்கியே முறையே. | ரூ.14,16 0/- | | |
| | 3) | இராமநாதபுரம் நகராட்சி, குடிநீர் நிதி Supply and Delivery of Sodium Hypoclorite solution 10000 litre for Drinking water supply விநியோகம் செய்யும் பணி முடிவுற்றமைக்கு பட்டியல் தொகை வழங்கியே முறையே. | ரூ.2,77, 200/- | | |
| | 4) | இராமநாதபுரம் நகராட்சி, பாதாளை சாக்கடை திட்டம் பராமரிப்பில் உள்ள லெட்சுமி ஊரணி தென்கரை ஸ்ரீ பகவதி அம்மன் கோயில் எதிர்புறம் நீரேற்று நிலையம் ( மண்டலம்-3 ) வளாகம் ஆகிய இடங்களில் கழிவுநீர் குழாய்களில் ஏற்பட்ட உடைப்பினை சரி செய்யும் பணி முடிவுற்றமைக்கு பட்டியல் தொகை வழங்கியே முறையே. | ரூ.7,79, 173/- | | |
| | 5) | இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட பட்டிணக்காத்தான் பகுதியில் அமைந்துள்ள புதிய உரக்கிடங்கு மேற்கு பகுதியில் உள்ள குப்பைகளை Hitachi இயந்திரம் மற்றும் டிப்பர் லாரி மூலம் ஒருமுகப்படுத்தி குவிக்கும் (Heap) பணி முடிவுற்றமைக்கு பட்டியல் தொகை வழங்கியே முறையே. | ரூ.3,79, 994/- | | |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr>
<td>6)</td>
<td>இராமநாதபுரம் நகராட்சி Covid 19, கொரோனா தொற்று பரவுதல், மதுரை-மண்டபம் சாலை, இராஜா மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நகர்ப்பகுதி பொதுமக்கள் முழுவதும் பயன்பெறும் வகையில் தற்காலிக காய்கறி மார்க்கெட் அமைப்பதற்கு தேவையான மின்விளக்குகள் மற்றும் ஒளி பெருக்கி வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கும் பணி முடிவுற்றமைக்கு ( 76) நாட்களுக்கு பட்டியல் தொகை வழங்கியே முறையே.</td>
<td>ரூ2,84,240/-</td>
</tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u>-தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920, விதி எண் 15ன் கீழ் மேற்கண்டவாறு, மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் பதிவேடு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>ந.க.எண்.837/2016/இ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..14</td>
<td>
இராமநாதபுரம் நகராட்சி, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது ந.க.எண்.21787/2021/EA2. நாள்.02.10.2021 அன்றைய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இந்நகராட்சியில் அடிப்படை சேவை பணிகளான கழிவுநீர் அகற்றுதல் மற்றும் தொடர்புடைய கட்டமைப்புகளை இயக்கி பராமரிக்கும் பணிக்கு போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தால் வெளிகொணர்வு முகமை மூலம் பணியாட்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தப்பட்டு தினசரி சேவைகள் செயல்படுத்துமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
அதன்படி, பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் சுமார் 63 கிலோ மீட்டர் நீளத்திற்கு பகிர்மான மற்றும் பிரதான கழிவுநீர் குழாய்களுடன் கூடிய 2160 எண்ணம் ஆழ்நுழைவு வாயிற்புழைகள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது மேலும் இத்திட்டத்தின்கீழ் நகர் பகுதியில் 4 எண்ணம் கழிவுநீர் நீரேற்று நிலையங்கள், 1எண்ணம் பிரதான கழிவுநீர் நீரேற்று நிலையம், மற்றும் 2 எண்ணம் கழிவுநீர் உந்து நிலையம் மற்றும் பிரதான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு அவற்றில் மின்மோட்டார்கள் பொருத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும் பாதாள சாக்கடை கழிவுநீர் குழாய்கள் பராமரிப்பு பணிகளுக்கு 2 எண்ணம் Jed Rodding வாகனம், கழிவுநீர் ஊர்தி வாகனம், Desilting Auto மற்றும் Robotic இயந்திரம் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட
</td>
<td>தீர்மானம் எண்.1580<br><br>அலுவலகக் குறிப்பு ஏற்பு.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் ஒப்பந்த அடிப்படையில் தனியார் பணியாளர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள அளவுகோலின்படி 61 பணியாளர்கள் தேவைப்படுகிறது. இதில் 2 ஒட்டுநர் பணியாட்கள் மட்டுமே உள்ளனர். மீதமுள்ள 59 பணியாளர்கள் தேவைப்படுகிறது. அதன்படி 59 நபர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்துவதற்கு விரிவான திட்டபிரேரணை. ஆண்டொன்றிற்கு ரூ.177.71 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்கவும், மேல்நடவடிக்கை தொடரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**-மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2635/2021/இ1 | |
| பொருள் எண்..15 | இராமநாதபுரம் நகராட்சி, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது ந.க.எண்.21787/2021/*EA2.* நாள்.02.10.2021 அன்றைய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இந்நகராட்சியில் அடிப்படை சேவை பணிகளான குடிநீர் மற்றும் தொடர்புடைய கட்டமைப்புகளை இயக்கி பராமரிக்கும் பணிக்கு போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தால் வெளிகொணர்வு முகமை மூலம் பணியாட்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தப்பட்டு தினசரிசேவைகள் செயல் படுத்துமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சியில் குடிநீர் பராமரிப்பு பணிக்கு அளவுகோலின்படி குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி வாயிலாக தினசரி குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு மொத்தம் 12 நபர்கள் தேவைப்படுகிறது. மேலும் இந்நகராட்சியில் தற்பொழுது 4 பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருவதால் மீதம் 8 நபர்கள் தேவைப்படுகிறது. அதன்படி, மேற்படி 8 நபர்களுக்கான வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்துவதற்கு விரிவான திட்டபிரேரணை ஆண்டொன்றிற்கு ரூ.21.37 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்கவும், மேல் நடவடிக்கை தொடரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு**- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2636/2021/***இ1*** | **தீர்மானம் எண்.1581**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்பு.** |

| | | |
|---|---|---|
| பொருள் எண்..16 | இராமநாதபுரம் நகராட்சி, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது ந.க.எண்.21787/2021/*EA2.* நாள்.02.10.2021 அன்றைய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இந்நகராட்சியில் அடிப்படை சேவை பணிகளான தெருவிளக்குகள் இயக்கி பராமரித்தல் பணிக்கு போதுமான பணியாட்கள் இல்லாத காரணத்தால் வெளிகொணர்வு முகமை மூலம் பணியாட்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தப்பட்டு தினசரி சேவைகள் செயல்படுத்துமாறு குறிப்பிடப்பட்டுள்ளது அதன்படி, இந்நகராட்சியில் தெருவிளக்குகள் இயக்கி பராமரிப்பு பணிக்கு அளவுகோலின்படி 3 மின்கம்பியாளர், மற்றும் 3 மின்கம்பி உதவியாளர்கள் ஆகமொத்தம் 6 நபர்கள் தேவைப்படுகிறது. மேலும் இந்நகராட்சியில் தற்பொழுது 3 மின்கம்பி உதவியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருவதால் மீதம் உள்ள 1 மின்கம்பியாளர்கள் தேவைப்படுகிறது. எனவே மேற்படி 3 நபர்களுக்கான வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்துவதற்கு விரிவான திட்டபிரேரணை ஆண்டொன்றிக்கு ரூ.10.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்கவும், மேல்நடவடிக்கை தொடரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு</u>**- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2637/2021/இ1 | **தீர்மானம் எண்.1582**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்பு.** |
| பொருள் எண்..17 | இராமநாதபுரம் நகராட்சி, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது ந.க.எண்.21787/2021/இ௭2, நாள். 02.10.2021 அன்றைய சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி இந்நகராட்சியில் அடிப்படை சேவை பணிகளான திடக்கழிவு மேலாண்மை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கு, போதுமான பணியாட்கள் இல்லாத காரணத்தால் வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியாட்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தப்பட்டு தினசரி சேவைகள் செயல்படுத்துமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை இயக்குதல் பணிக்கு அளவுகோலின்படி 97 துாய்மை பணியாளர்கள், 04 ஓட்டுநர்கள் மற்றும் 13 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் ஆக மொத்தம் 114 நபர்கள் தேவைப்படுகிறது. மேற்படி நபர்களுக்கு வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்துவதற்கு விரிவான திட்ட பிரேரணை ஆண்டு ஒன்றுக்கு | **தீர்மானம் எண்.1583**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்பு.** |

| | | |
|---|---|---|
| | ரூ.**232.98** லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்கவும், மேல் நடவடிக்கை தொடரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்.23/2021/எச்1** | |
| பொருள் எண்..**18** | இராமநாதபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பெரியார் நகர் பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான பூங்கா வளாகத்தில் அங்கன்வாடி மைய கட்டிடம் மிகவும் பழுதடைந்து இடியும் தருவாயில் உள்ளது. மேலும் மேற்படி வளாகத்தில் தரைமட்ட நீர்த்தொட்டியும் பழுதடைந்த நிலையில் உள்ளது. இதனால் பூங்கா வளாகத்தில் வரும் சிரார்களுக்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே அபாயகரமாக உள்ள கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு-** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2711/2021/இ1 | **தீர்மானம் எண்.1584**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்பு.** |
| பொருள் எண்..**19** | இராமநாதபுரம் நகராட்சி, குடிநீர் நிதி 2021-22, நகர் பகுதியில் குடிநீர் தினசரி விநியோகம் செய்யும் பணிக்கு Liquid Chlorine 10000 லிட்டர் வாங்கும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.2.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு-** 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) இப்பணி குடிநீர் நிதியின் கீழ் பணி மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.2845/2021/இ1 | **தீர்மானம் எண்.1585**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்பு.** |
| பொருள் எண்..**20** | இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளான லோக்கல் பண்டு ரோடு, பாரத ஸ்டேட் வங்கி எதிரில் வார்டு- சி, பிளாக்-6 நகரளவு எண்-99 (கோப்பு எண்.1999/2020/அ2) மற்றும் லேத்தம்ஸ் பங்களா ரோடு பி2 பஜார் காவல் நிலையம் எதிரில் வார்டு-சி, பிளாக்-7, நகரளவு எண்-81 (கோப்பு எண்.4845/2018/அ2) ஆகிய இரண்டு இடத்திற்கும் | **தீர்மானம் எண்.1586**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்பு.** |

| | | |
|---|---|---|
| | ஆவின் பாலகம் அமைக்க 10'X8' என்ற அளவில் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்படியான இடங்களுக்கு மாத வாடகை ரூ.4,040/- வீதம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் வைப்புத் தொகை ரூ.24,000/- மற்றும் குத்தகை கட்டணம் ரூ.500/- என நிர்ணயம் செய்து மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு-</u>** 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பாரத ஸ்டேட் வங்கி எதிரில் மற்றும் லேத்தம்ஸ் பங்களா ரோடு பி2 பஜார் காவல் நிலையம் எதிரில் ஆகிய இரண்டு இடங்களுக்கும் மாத வாடகை ரூ.4,040/- வைப்புத் தொகை ரூ.24,000/- மற்றும் குத்தகை கட்டணம் ரூ.500/- என நிர்ணயம் செய்ததை மன்றம் அனுமதிக்கலாம். | |
| பொருள் எண்..21 | இராமநாதபுரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதில் நகர் பகுதிகளில் உள்ள பல்வேறு இடங்களில் ஆழ்நுழைவு வாயிற் புழைகள் தாழ்ந்தும் சில இடங்களில் பக்கவாட்டு சுவர்கள் இடிந்தும் உள்ளது. இதனால் பாதாள சாக்கடை கழிவுநீர் தேங்கி நின்று ஆழ்நுழைவு வாயிற்புழை வழியாக வெளியேறி வருகிறது. இதனால் பொது மக்களுக்கும், போக்கு வரத்திற்கும் மிகவும் இடையூறாக உள்ளது. எனவே நகரில் பல்வேறு இடங்களில் தாழ்வாகவும் உடைந்த நிலையில் உள்ள ஆழ்நுழைவு வாயிற்புழைகளை (Manhole) உயர்த்தி கட்டுவதற்கு உத்தேச செலவினம் ரூ.4.55 இலட்சத்திற்கு பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் பணிமேற்கொள்ள மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு-</u>** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2998/2021/இ1 | **தீர்மானம் எண்.1587**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்பு.** |
| பொருள் எண்..22 | இராமநாதபுரம் நகராட்சி, பராமரிப்பில் உள்ள பள்ளிகள் கொரோனா தொற்று பரவலுக்கு பின், திறக்கப்படவுள்ளதால், நகராட்சி பள்ளியான அறிஞர் அண்ணா நகராட்சி நடுநிலைப்பள்ளி, வள்ளல்பாரி நகராட்சி நடுநிலைப் பள்ளி, எம்.எஸ்.கே. தொடக்கப்பள்ளி மற்றும் நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. அதன்படி மேற்கண்ட பள்ளிகளில் புதிய மின்விசிறி மாற்றுதல் மற்றும் வயரிங் வேலைகள் செய்ய வேண்டியுள்ளது. மேலும் பள்ளிகள் திறக்கப்பட உள்ளதால் அவசர அவசியம் முன்னிட்டு உடனே மராமத்து பணிகள் மேற்கொள்ள | **தீர்மானம் எண்.1588**<br>**அலுவலகக் குறிப்பு ஏற்பு.** |

<table>
<tr><td></td><td>மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. எனவே, மேற்கண்ட பள்ளிகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.70 இலட்சத்திற்கு கல்வி நிதியின் கீழ் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:–</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2999/2021/இ1</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்..23</td><td>இராமநாதபுரம் நகராட்சி, அலுவலக கட்டிடத்தின் உட்புறம் சுவர்களில் ஆங்காங்கே வெடிப்பு மற்றும் சுவர்களில் பூச்சுகளில் அரிப்பு ஏற்பட்டு உள்ளது. மேலும், கழிப்பறை கோப்பைகள் உடைந்த நிலையில் உள்ளது. மேலும், கட்டிடத்தின் மேற்கூறையில் தட்டு ஓடுகளிலிருந்து மழைநீர் கசிவு ஏற்பட்டு வருகிறது. இதனால், அலுவலக கட்டிடம் பொலிவிழுந்து காணப்படுகிறது. எனவே, மேற்படி நகராட்சி அலுவலக கட்டிடத்தின் மராமத்து பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.00/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியின் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:–</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3001/2021/இ1</td><td>தீர்மானம் எண்.1589<br>அலுவலகக் குறிப்பு ஏற்பு.</td></tr>
<tr><td>பொருள் எண்..24</td><td>இராமநாதபுரம் நகராட்சி, வளர்ச்சி திட்டம் மற்றும் சாதனைகள் குறித்து 15வது மத்திய நிதிக்குழு மான்ய நிதி திட்டம் 2020–21–ன் கீழ் மதிப்பீட்டு தொகை ரூ.85.60 இலட்சத்திற்கு தொழில் மலரில் 2021–ல் விளம்பரம் வெளியிட்ட வகையில் கீழ்க்கண்டவாறாக உள்ள விளம்பரதாரர்களுக்கு பட்டியல் தொகை தனித்தனியே வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><table><tr><td>வ.எண்</td><td>விளம்பரதாரர்களின் பெயர்கள்</td><td>பில் நம்பர் மற்றும் நாள்</td><td>பட்டியல் தொகை (ரூ.</td></tr><tr><td>1.</td><td>இந்து – தமிழ் திசை நாளிதழ் (Sai Medias)</td><td>186/ 14.10.2021</td><td>10,225</td></tr><tr><td>2.</td><td>மக்கள் குரல் நாளிதழ் (Newsmen Associates</td><td>Mdu</td><td>9,450</td></tr></table></td><td>தீர்மானம் எண்.1590<br>அலுவலகக் குறிப்பு ஏற்பு.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | Limited) | MAB212200200/ 14.10.2021 | |
| 3. | தினத்தந்தி, நாளிதழ் | 2122 Mdu 211003477/ 14.10.2021 | 41,580 |
| 4. | தினசூரியன், நாளிதழ் | 5766 / 22.10.2021 | 9,975 |

**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3877/2014/இ1

தனி அலுவலர் மற்றும்
நகராட்சி ஆணையர்(பொ)
இராமநாதபுரம் நகராட்சி